# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : திரு. **மகேசன் காசிராஜன்,** இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 109/ந/2024**
**நாள்.06.12.2024**

திருமதி. M.மணிமேகலை,
அம்பாசமுத்திரம், திருநெல்வேலி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையாளர்,
அம்பாசமுத்திரம் நகராட்சி, திருநெல்வேலி மாவட்டம். – எதிர்மனுதாரர்

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம், வேலாயுத நகர் கதவு எண்.2/54–A, என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி. M.மணிமேகலை என்பவரின் 05.08.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 07.08.2024 அன்று பெறப்பட்டு, 109/ந/2024 என்ற எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம், வேலாயுத நகர் கதவு எண்.2/54–A, என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி. M.மணிமேகலை என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார் :-

“நாங்கள் குடியிருக்கும் பகுதி ஆதிதிராவிடருக்காக அரசாங்கத்தால் 50 வருடங்களுக்கு முன்பு கொடுக்கப்பட்ட குடியிருப்பு மனைகளாகும். வீட்டின் மேல்புறம் கழிவு நீர் கால்வாய் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. நாங்கள் குடியிருக்கும் வீட்டின் மேல்புறம் உள்ள இடம் ஆதிதிராவிடருக்காக அரசாங்கத்தால் வழங்கப்பட்ட தனிநபருடைய பட்டா இடமாகும். தனிநபருடைய பட்டா இடத்தின் வழியே எப்படி பொது கால்வாயை அமைக்க முடியும். வீட்டின் தென்புறமும் மேல்புறமுமாக இருபுறமும் அம்பாசமுத்திரம் நகராட்சியால் கழிவு நீர் கால்வாய் அமைக்கப்பட்டு வருகிறது. இதனால் எங்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்பட வாய்ப்புள்ளது. நகராட்சியின் இடத்தில் அமைக்க வழியிருந்தும் தனிநபருடைய இடத்தின் வழியே ஏன் அமைக்கிறார்கள் என்று தெரியவில்லை, இதுகுறித்து அம்பாசமுத்திரம் நகராட்சியிடம் மனு கொடுத்துள்ளோம். இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. தாங்கள் விசாரிக்க வேண்டி தங்களிடம் முறையிட்டுள்ளோம்’’ என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனு குறித்து அம்பாசமுத்திரம் நகராட்சி ஆணையாளரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 21.08.2024 நாளிட்ட அறிவிப்பின் மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3) அம்பாசமுத்திரம் நகராட்சி ஆணையர் தனது 18.09.2024 நாளிட்ட கடிதத்தில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:-

‘‘மனுதாரர் திருமதி. மணிமேகலை, 2/54 A, வேலாயுதநகர், அவர்கள் குறிப்பிட்டுள்ள சர்வே எண்.91/1 A 6ல் கண்ட 0.700 ஏர்ஸ் நிலம் தங்களுக்கு பாத்தியப்பட்டது எனவும், இவ்விடம் ஆதிதிராவிடருக்காக அரசாங்கத்தால் வழங்கப்பட்ட தனி நபருடைய பட்டா இடம் என்றும் 30.04.2024ல் சித்திரை வடிவம்மாள் என்ற பெயரில் எச்சரிக்கை கடிதம் அனுப்பப்பட்டது. அம்பாசமுத்திரம் நகராட்சி அலுவலக கடிதத்தின்படி தமக்கு சொந்தமான இடம் எனில் அதற்கான ஆவணங்களை இவ்வறிவிப்பு கிடைக்க பெற்ற ஏழு தினங்களுக்குள் நகராட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டிருந்தது. தவறும் பட்சத்தில் ஆவணங்கள் ஏதுமில்லை என கருதி மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விபரம் 02.05.2024ல் அம்பாசமுத்திரம் நகராட்சி அலுவலக கடிதம் அனுப்பப்பட்டது. இந்நிலையில் மனுதாரர் மேலே குறிப்பிட்டுள்ள சர்வே எண்.91/1 A6ல் 0. 700 ஏர்ஸ நிலம் தமக்கு சொந்தமில்லை என்று வாக்குமூலம் கடிதம் அனுப்பப்பட்டது. மேலும் தனது வீட்டின் அருகில் தோண்டப்படும் கழிவுநீர் ஓடையை மாற்றி அமைக்க வேண்டுமென தெரிவித்துள்ளார். இந்நகர்மன்ற தீர்மான எண்.673/05.03.2024 ன்படி ரூ.6.50 இலட்சத்தில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. இம்மழைநீர் வடிகால் மூலம் எவ்வித சுகாதார சீர்கேடும் ஏற்பட வாய்ப்பில்லை என்றும், மனுதாரர் தவறாக அளித்துள்ள புகாரினை ரத்து செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்படி பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்’ என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரரும் மற்றும் எதிர்மனுதாரரான அம்பாசமுத்திரம் நகராட்சி ஆணையரும் 28.10.2024 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 25.09.2024 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திருமதி. எம். மணிமேகலை என்பவர் 28.10.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை. அவர் தனது நாளிடப்படாத கடிதத்தின் வழியாக தான் வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை எடுத்து ஓய்வில் உள்ளதால், தன்னால் விசாரணைக்கு ஆஜராக இயலவில்லை என தெரிவித்து, தனக்கு பதில் தனது கணவர் திரு. மா. ஹரிகிருஷ்ணன் என்பவரை விசாரணைக்கு அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

6) மனுதாரர் திருமதி. எம். மணிமேகலை என்பவருக்கு பதிலாக அவரது கணவர் திரு. மா. ஹரிகிருஷ்ணன் என்பவர் 28.10.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் கலந்து கொண்டு தனது வாக்குமூலத்தை இம்முறை மன்ற நடுவத்தில் கீழ்க்கண்டவாறு அளித்துள்ளார்.

"மதிப்புக்குரிய ஐயா, கழிவுநீர் கால்வாயை கொண்டு செல்ல மாற்று வழியிருந்தும் திட்டமிட்டு வேண்டுமென்றே எனது வீட்டையொட்டி கொண்டு சென்றிருக்கிறார்கள். மேலும் அருகிலுள்ள காலிமனை வேறு ஒருவருடையது ஆகும். உள்ளூர் சிறப்பு SI திரு. மேத்தாஜி, மேல் வீடு திரு. ஜார்ஜ், இவர்களது பேச்சைக்கேட்டு பணி மேற்பார்வையாளர் திரு.சோலையப்பன் எனது வீட்டின் அருகே வாய்க்கால் அமைத்து அவ்வாய்க்கால் முடிவு பெறும் இடம் தனிநபர் நிலமாக உள்ளதால் அரசின் வரிப்பணத்தை வீணடித்திருக்கிறார்கள். இம்முறைமன்ற நடுவத்தில் மனு தாக்கல் செய்த பின்னர் வேக வேகமாக இப்பணி செய்யப்பட்டுள்ளது. மேற்புறமுள்ள தனி நபர் காலிமனையில் போடப்பட்ட தார் சாலையும் பாதியளவு வீணாகி விட்டது. நீர் மேலாண்மை சரிவர திட்டமிட்டு செய்வதேயில்லை. இறுதியாக முடியும் இரண்டு கழிவுநீர் கால்வாய்கள் தனிநபர்களின் நிலத்தின் மீது போய் முட்டி நிற்கிறது. மக்களின் வரிப்பணம் வீணடிக்கப்படக்கூடாது. வரிப்பணம் வீணடிக்கப்பட்டதில் மன வேதனை எனக்குள்ளது. மிகப்பெரிய நகராட்சியான அம்பாசமுத்திரத்திற்கு நேர்மையும், துடிப்புள்ள நபர் ஆணையாளராக வேண்டும். கழிவுநீர் கால்வாய் மாற்றியமைக்கப்பட வேண்டும். கால்வாய் தோண்டும் பணியின் போது வயதான எனது தந்தையை ஒப்பந்ததாரர்கள் மிரட்டிய புகைப்படத்தை காண்பித்தேன்.

- கழிவு நீர் செல்ல மாற்று வழியிருந்தும் திட்டமிட்டு வேண்டுமென்றே எனது வீட்டையொட்டி கொண்டு சென்றுள்ளதை கால்வாயை மாற்றி அமைக்க உத்தரவிட வேண்டுமாய் இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5) எதிர்மனுதாரான அம்பாசமுத்திரம் நகராட்சி ஆணையர் 28.10.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை. அம்பாசமுத்திரம் நகராட்சி ஆணையர் சார்பில் அம்பாசமுத்திரம் நகராட்சியில் பணிமேற்பார்வையாளராகப் பணிபுரியும் கி. சோலைசாமி, என்பவர் விசாரணையில்

ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நேரடியாக தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தின் முன் பதிவு செய்துள்ளார்.

"தற்போது அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகாலானது மனுதாரரின் இடத்தில் அமைக்கப்படவில்லை. மனுதாரர், திருமதி. சித்திரை வடிவு அம்மாள் என்பவரது இடத்தில் மழைநீர் வடிகால் அமைந்துள்ளதாக தெரிவித்துள்ளார். திருமதி. சித்திரை வடிவு என்பவரால் அம்பாசமுத்திரம் நகராட்சிக்கு 02.05.2024 அன்று தனது இடத்தில் வடிகால் அமைக்கக்கூடாது என வரப்பெற்ற மனுவிற்கு வடிகால் அமைக்க உள்ள இடமானது தங்களுக்கு பாத்தியப்பட்டது எனில், ஆவணங்களை அம்பாசமுத்திரம் நகராட்சிக்கு சமர்ப்பிக்க கேட்டு 02.05.2024 அன்று அம்பாசமுத்திரம் நகராட்சி அலுவலக கடிதம் பதிவு தபால்மூலம் அனுப்பப்பட்டதில் address cannot be located என 03.05.2024 அன்று தபால் துறை மூலம் அம்பாசமுத்திரம் நகராட்சி அலுவலகத்திற்கு திருப்பி வரப்பெற்றது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. மேலும் குறிப்பிட்டது போல் மாற்றுப்பாதையில் வடிகால் அமைத்தால் கூடுதலாக 200 மீட்டர் அமைக்கப்பட வேண்டியது இருக்கும் என்ற விபரமும் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. தற்போது மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டுள்ள இடம், தங்களுக்கு உரிய இடம் என யாரிடமிருந்தும் நாளது தேதி வரை எவ்வித புகாரும் வரப்பெறவில்லை என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. மனுதாரர் சுகாதார சீர்கேடு ஏற்பட வாய்ப்பு உள்ளது என கூறியதால் அவரது வீட்டில் மேல்புறம் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகாலிற்கு கான்கிரீட் மேற்கூரை அமைத்து மூடப்பட்டுள்ளது என்ற விவரமும் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. மேலும் தற்போது அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால் ஏற்கனவே உள்ள பழைய வடிகாலில்தான் இணைக்கப்பட்டுள்ளது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. மேலும் திரு. Y.ஜார்ஜ் என்பவர் சாலையினை ஆக்கிரமித்து ramp அமைத்துள்ளார் என மனுதாரர் கூறியுள்ளார். மேற்காண் ramp –ஐ 15 தினங்களுக்குள் அப்புறப்படுத்தப்படும் என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் 18.09.2024 நாளிட்ட நகராட்சி ஆணையாளரின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள விபரங்களை மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**6. மனுதாரரின் புகார் மனு மற்றும் மனுதாரரது கணவரின் வாக்குமூலம் , அம்பாசமுத்திரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை, மற்றும் அம்பாசமுத்திரம் நகராட்சி பணிமேற்பார்வையாளரின் வாக்குமூலம், மற்றும் இதர ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:**

மனுதாரின் புகார் மனுவில், வீட்டின் தென்புறமும் மேல்புறமுமாக இருபுறமும் அம்பாசமுத்திரம் நகராட்சியால் கழிவு நீர் கால்வாய் அமைக்கப்பட்டு வருவதாகவும், நகராட்சியின் இடத்தில் அமைக்க வழியிருந்தும் ஆதிதிராவிடருக்காக அரசாங்கத்தால் வழங்கப்பட்ட தனிநபருடைய பட்டா இடத்தின் வழியே பொது கால்வாயை அமைக்கப்படுவதால் சுகாதார சீர்கேடு

ஏற்பட வாய்ப்புள்ளது என தெரிவித்துள்ளார். இப்புகார் குறித்து அம்பாசமுத்திரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை, மற்றும் அம்பாசமுத்திரம் நகராட்சியில் பணிமேற்பார்வையாளரின் வாக்குமூலத்தில் தற்போது அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகாலானது மனுதாரரின் இடத்தில் அமைக்கப்படவில்லை எனவும், மாற்றுப்பாதையில் வடிகால் அமைத்தால் கூடுதலாக 200 மீட்டர் அமைக்கப்பட வேண்டியது இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டுள்ள இடம், தங்களுக்கு உரிய இடம் என யாரிடமிருந்தும் நாளது தேதி வரை எவ்வித புகாரும் வரப்பெறவில்லை எனவும், மனுதாரர் சுகாதார சீர்கேடு ஏற்பட வாய்ப்பு உள்ளது என கூறியதைத் தொடர்ந்து வீட்டின் மேல்புறம் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகாலிற்கு கான்கிரீட் மேற்கூரை அமைத்து மூடப்பட்டுள்ளது என்ற விவரமும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தற்போது அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால் ஏற்கனவே உள்ள பழைய வடிகாலில்தான் இணைக்கப்பட்டுள்ளது எனவும், திரு. Y.ஜார்ஜ் என்பவர் சாலையினை ஆக்கிரமித்து ramp அமைத்துள்ளதை 15 தினங்களுக்குள் அப்புறப்படுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இந்நேர்வில் மழைநீர் வடிகால் அமைக்கப்படும் இடம் பட்டா இடமல்ல என்பதை உறுதி செய்து கொண்டு, சுகாதார சீர்கேடு ஏற்படாதவகையில் மழைநீர் வடிகாலினை அமைத்திடவும், திரு. Y.ஜார்ஜ் என்பவர் சாலையினை ஆக்கிரமித்து ramp அமைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்ட மனுதாரரின் கோரிக்கை மீது தமிழக அரசு சட்ட விதிகள், வழிகாட்டுதல்கள் மற்றும் மாண்பமை நீதிமன்ற வழிகாட்டுதல்களின்படியும், உரிய நடவடிக்கையினை எடுத்து, அதுகுறித்த நடவடிக்கையின் விவரத்தினை 15 தினங்களுக்குள் இம்முறை மன்றத்திற்கு தெரிவித்திட அம்பாசமுத்திரம் நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி, அவ்வாறே இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2024–ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் 06 –ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திருமதி. ம. மணிமேகலை.,
கதவு எண்.2/54–A, வேலாயுத நகர்
அம்பாசமுத்திரம், திருநெல்வேலி மாவட்டம்,

2) நகராட்சி ஆணையர்,
அம்பாசமுத்திரம் நகராட்சி,
திருநெல்வேலி மாவட்டம்

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4) ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்

இ.கோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சட்ட ஆலோசகர்/செயலாளர்(முகூபொ)